**முதலாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு**

O.S.No. 23 /2014

**தேதி :**23.01.2020

வா.சா.1 – குமார்

**சாட்சி இன்று ஆஜராகி 4 முத் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கு சொத்தை தவிர வேறு சொத்துக்கள் எனக்கு உள்ளதா என்றால் உள்ளது. பூர்வீகமுறையில் பாத்தியப் பட்ட சொத்துக்கள் உள்ளது. பூர்வீக முறையில் பாத்தியப் பட்ட அந்த சொத்துக்களை கூட்டு பங்குதாரர்களுடன் பிரித்துக் கொள்ள வில்லை . இந்த சொத்தை மட்டும் பிரித்துக கொள்ள வேண்டி வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரிதான் . பூர்வீக சொத்தில் வந்த வருமானத்தைக் கொண்டு தாவா சொத்தை வாங்கியதாக சொல்வதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை . என் தாயாரும் 2 ம் பிரதிவாதி சின்னசாமியும் தாவா சொத்தை 8.4.1996 ம் தேதி கிரையம் பெற்றார்களா என்றால் அது எனக்கு தெரியாது. வழக்கு சொத்து எவ்வாறு பெறப்பட்டது என்று தெரியுமா என்றால் வழக்கு சொத்து பூர்வீக சொத்தை விற்று அதன்மூலம் வாங்கியது என்று தெரியும் . வழக்கு சொத்து 2 , 3 பிரதிவாதிகளுக்கு கிரைய வகையில் சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்றால் குடும்ப வருமானத்தில் இருந்து பெறப்பட்டது அவர்களுக்கு சுய வருமானம் எதுவும் இல்லை. தாவா சொத்தை பூர்வீக சொத்தை விற்ற வகையிலும் குடும்ப வருமானத்திலிருந்தும் கிரையம் வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றர்ல் சரியல்ல. தாவா சொத்தை 4 ம் பிரதிவாதிக்கு விற்பதாக சொல்லி 2, 3 ம்பிரதிவாதிகள் ஒரு கிரைய ஒப்பந்தம் 22.4.1996 ம் தேதி ஒப்பந்தம் போட்டார்களா என்று எனக்கு தெரியாது. 2, 3 ம் பிரதிவாதிகள் தாவா சொத்தை ரூபாய் 23 ஆயிரத்திற்கு விற்பதாக சொல்லி 4 ம் பிரதிவாதியுடன் ஒரு ஒப்பந்தம் போட்டார்கள்

என்றும் வழக்கிற்காக அது பற்றி தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1996 ம் வருடம் நானும் என் தகப்பானர் தாயார் ஒன்றாக இருந்தோமா என்றால் என் அப்பா அம்மா குமாரவலசில் இருந்தார்கள் . நான் ஈரோட்டில் இருந்தேன் வாரம் 1 முறை வீட்டிற்கு செல்வேன் .குடும்ப விசயம் மற்றும் போக்குவரத்து விசயங்களை என் பெற்றோர் என்னுடன் கலந்து ஆலோசிப்பது உண்டா என்றால் இல்லை . 1996 ம் வருடம் நான் இரும்பு கடையில் வேலை செய்தேன் . அதற்கான ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் . 1996 ம் வருடம் நான் வேலைக்கு செல்ல வில்லை என்றும் அப்போது படித்துக் கொண்டிருந்தேன் என்றும் என் குடும்பத்துடன் ஒன்றாக குடியிருந்தேன் என்றும் தற்போது வழக்கிற்காக வேலைக்கு சென்றதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.